# ஐங்குறுநூற்றில் பண்பாட்டுப் பதிவுகள்

*சு. சிவனேஸ்வரன்*
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு
https://doi.org/10.5281/zenodo.14383214

## முன்னுரை

*தமிழர்களுடைய பண்பாடு என்பது மிகவும் பழமை பட்டதாகும். சங்க காலங்களில் வாழ்ந்தத் தமிழ் மக்கள் இன்றையச் சூழலில் நம் வாழ்க்கையோடு உபயோகிக்கின்றப் பண்பாடுகளை அன்றே பக்குவப்படுத்திக் காட்டியிருக்கின்றனர். இதனைச் சங்க இலக்கிய நூல்கள் நமக்கு விவரிக்கின்றன. சங்க இலக்கியம் எட்டுத்தொகையில் அகம் சார்ந்த நூலான ஐங்குறுநூற்றில் பண்பாடுகள் சார்ந்த பதிவினை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.*

## ஆய்வு நோக்கம்

*தமிழர்களின் பண்பாடெனக் கூறப்படும் உணவு, உடை, திருமணம், இசை, அணிகலன்கள் போன்றக் குறிப்புகள் ஐங்குறுநூற்றில் இடம் பெற்று இருக்கின்றன என்பதனை விவரித்து இயம்புவது இக்கட்டுரையின் நோக்கம்.*

## ஐங்குறுநூறு - விளக்கம்

*ஐந்து நிலங்களுக்கு 100 பாடல்கள் வீதம், 500 பாடல்கள் கொண்டத் தொகுப்பு ஐங்குறுநூறு ஆகும். இது அகம் சார்ந்த நூல். ஐந்து திணைக்கும் ஒவ்வொரு புலவர்கள் வீதம் ஐந்து புலவர்கள் ஐந்நூறு பாடல்களை இயற்றியுள்ளனர்.*

**மருதம் ஓரம்போகி: நெய்தல் அம்மூவன்**
***கருதும் குறிஞ்சி கபிலன்: - கருதிய***
***பாலை ஓதலாந்தை: பனிமுல்லைப் பேயனே:***
***நூலையோ தைங்குறு நூறு. (1)***
*என்பதாகும்.*

## பண்பாடு விளக்கம்

*'பண்' என்பது செய் என்னும் பொருள் தரும். "பாடு" என்பது தொழில். அக்காலம் தொட்டே செய்யப்படும் செயல் என்றும் கூறப்படுகின்றது. மானுடவியலாளர்பண்பாடு எனப்படும் நடத்தை இரு வழியாக மனிதனைச் சாருகிறது என்கின்றனர். ஒன்று மரபு வழியாகப் பெற்றது. மற்றது கல்வி வழியாகப் பெற்றது. ஒரு சந்ததியிடம் இருந்து அவர்கள் வழங்கியப் பழக்கவழக்கங்கள் புதிய சந்ததிக்கு இடம் பெயர்கின்றன. புதிய தலைமுறை பழைய பழக்கவழக்கங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொள்வதும் உண்டு.(2) என்று பக்தவச்சல பாரதி விளக்குகிறார். அவ்வகையில் ஐங்குறுநூறில் காணப்படும் பண்பாட்டு பதிவுகள் இங்கனம் ஆராயப்படுகிறது.*

## பண்பாட்டுப் பதிவுகள்

*ஐங்குறுநூற்றில் உழவு, உணவு, திருமணம், இசை, அணிகலன் போன்ற தமிழ் மக்களுக்கே உரித்தான பண்பாட்டுக் கூறுகள் காணப்படுகின்றன. இவற்றில் அணிகலன்கள் சார்ந்த பண்பாட்டுப்பதிவுகளும், வேளாண்மை சார்ந்த பண்பாட்டுப் பதிவுகளும் அதிக அளவு கொண்ட பாடல்களாக அமைந்திருக்கின்றன.*

## வேளாண்மை

*வேளாண்மை என்பது உழவுத் தொழிலை குறிப்பது. அக்கால கட்டங்களில் மக்கள் உழவுத் தொழில் செய்த பாங்கினையும் அந்த நிலத்திற்கே உரிய மன்னனின் சிறப்புகளும் பதியப்பட்டு இருக்கின்றன. புதியதாய் உழுத ஈர மண்ணைக் கண்டு பறவைகள் வந்து கூட்டமாய் அமர்ந்ததனை,*

***திணை : குறிஞ்சி***
***புன்புல மயக்கத் துழுத வேனல்***
***பைம்புறச் சிறுக்கிளி கடியும் நாட!(3)***

*இங்கனம், பள்ளி இடத்தனதாய் தலைவன் களித்திருந்த போது, அங்கே புகுந்த தோழி தலைவனுக்கு அறிவுறுத்துவளாய் சொல்லியது. இதில் வேளாண்மை நிலத்தை எடுத்துக்காட்டி அறிவுறுத்துதல் போல் இப்பாடல் அமைந்திருக்கின்றது.*

*சங்க கால மக்கள் வேளாண்மை புரிந்ததையும், அறுவடையில் கிடைத்த உணவுப் பண்டங்களையும் சுட்டிக்காட்டி அமைகின்றது இவ்வரிகள்.*

***திணை : குறிஞ்சி***
***புன்புலம் வித்திய புனவர் புணர்த்த***
***மெய்ம்மை அன்ன பெண்பாற்புணர்ந்து***
***மன்றிற் பையுள் தீரும்***
***குன்ற நாடன் உறீஇய நோயே!(4)***

*இங்குதம்முடையபுன்செய்கொல்லைகளிலே தினையை விதைத்துள்ளக் கானவர் கதிர் முற்றும் போதுஅப்பயிரைபறவைகளும்விலங்குகளும் அழிக்காதபடிஅச்சுறுத்திவிரட்டும்பொருட்டாச் செய்து வைத்துள்ள, உண்மையானப் புலியைப் போலவே தோன்றும் சுழற்சிக்காய்கள் உடலில் பதிக்கப்பெற்ற பொம்மைப் பெண் புலியினை மிளகுக் கொடி படரும் கல்முழைஞ்சினுள்ளே வாழும் வலிய புலியோரானது கூடிவிட்டு, படப்பையின் நடுவிடத்தேக் கிடந்து தன் களைப்பைப் போக்கியபடி இருக்கும் குன்றநாட்டிற்கு உரியவன் நம் தலைவன் என்று தலைவனின் நாட்டின் பெருமையை தோழி தலைவிக்கு உரைக்கிறாள்.*

**உணவு**

*ஐங்குறுநூறு குறிஞ்சித் திணையில் உணவு சார்ந்த குறிப்புகளும் இடம்பெற்றிருக்கின்றன. அதில் தழைகளை உண்டு மான்கள் வாய் வைத்து குடித்த நீர் இனிமையாக இருக்கும். அத்தகு சிறப்புடையது தலைவனின் ஊர் என்பதனை,*

***தேன் மய்ங்கு பாலினும் இனிய அவர்நாட்டு***
***உவலைக் கூவற் கீழ***
***மானுண் டெஞ்சிய கலிழ் நீரே!(5)***

*இத்தகுபாடல்வரிகள்எடுத்துக்காட்டுகின்றன. மலையும் மலை சார்ந்த இடமான குறிஞ்சியில் கானவர்கள் கிழங்கு எடுத்த நெடுங்குழிகளில் வேங்கையின் பொன் போன்ற புது பூக்கள் விழுந்து கிடக்கும் மலைக்குச் சொந்தக்காரன் தலைவன் என்பதனை,*

***கானவர் கிழங்ககழ் நெடுங்குழி***
***மல்க வேங்கை பொன்மலி***
***புதுவீ தாஅம் அவர்நாட்டு!(6)***

*என்னும் வரிகள் கானவர்கள் தன் உணவுக்காகக் கிழங்கெடுத்த செய்தியினை இப்பாடல் வரிகள் விளக்குகின்றன.*

**திருமணம்**

*இருமனம் ஒன்றிணைந்த பின் திருமணம் உண்டாகிறது. நெடும் காலமாய் தலைவனும் தலைவியும் காதல் செய்கின்றனர். பின் ஊராரின் அலறல் ஏற்பட்டு இருவரும் மணம் செய்கின்றனர். இன்றையச் சூழலில் பிரம்மாண்டமாக நடத்தப்படுகின்ற திருமணங்கள் நமது பண்பாட்டின் வழியாக உருவெடுத்தது என்பதற்கு சங்க இலக்கியம் சான்று.*

***மருதத் திணையில் ஒரு பாடலில்,***
***மணந்தனை அருளாய் ஆயினும்,***
***பைபயத் தனந்தனை யாகி, உய்ம்மோ(7)***

*தலைவியை மணந்து மனையறம் தொடங்கி நெடுங்காலம்கூடகழியாமல்அதற்குள்ளேயே அவளை விட்டு விட்டு பரத்தியரின் உறவை நாடி செல்கிறான் தலைவன். அதனை பலரும் சொல்லக்கேட்ட தலைவியானவள் தலைவன் தன்னை அணுகும் போது புலந்து கூறுவதாக அமைகின்றது இந்தப் பாடல். தலைவன் பரத்தையைக் கூடுகின்ற செய்தியை கூறும் விதத்து மணம் என்ற பண்பாட்டின் பகுதியை விளக்குகிறது இச்செய்யுள்.*

**அணிகலன்கள்**

*அணிதல் என்பது உடுத்திக் கொள்ளுதல் அல்லது ஒட்டிக் கொள்ளுதல் என்று பொருள் படும். இந்த உடலுக்கு அலங்காரம் செய்வதில் தனி ஒரு கவனம் செலுத்தியிருந்தனர் சங்க கால மக்கள். ஒவ்வொரு நிலத்திற்குத்*

தகுந்தவாறான அணிகலன்களை அவர்கள் அணிந்தனர். அதில் நெய்தல் திணையில் சங்கை அறுத்து செய்த வளையல் என்ற வளையலின் செய்தியை,

**கோடீர் எல்வளைக் கொழும்பல் கூந்தல்**
**ஆய்தொடி மடவரல் வேண்டுதி யாயின்(8)**

ஊரார் அலறுவதற்கு முன் வந்து தலைவியை மணம் முடித்துக் கொள் என்று தோழி கூறும் கூற்றில், சங்கை அறுத்து செய்த ஒளியினை உடைய வளையினை இடையும் கொழுவிய பலவான கூந்தலையும் உடைய தலைவியினை விரைந்து வந்து மணம் கொள்ளல் செய்வாயாக என்று பாடப்பட்டது இப்பாடல். இன்று பெண்கள் பயன்படுத்துகின்ற வளையல் சங்க காலத்திலேயே இருந்திருக்கின்றது என்பதற்கு இப்பாடல் ஒரு சான்று.

களவு இடத்திற்குக் குறித்த நேரத்தில் வந்து நின்ற தலைவி தலைமகனை அடைந்து மகிழ்வதற்கு நாணமும் அச்சமும் பெறுகிறாள். இந்த நிலையைக் கண்ட தலைவன் தனக்குள்ளேயே சொல்லியதாக அமைந்த இப்பாடலில் தலைவி அணிந்திருந்த வளையலின் செய்தி கீழ்காணுமாறு அமைகிறது.

**இலங்குவளை தெளிர்ப்ப அலவன் ஆட்டி**
**முகம்புதை கதுப்பினள்**
**இறைஞ்சி நின் றோளே(9)**

என்ற வரிகளின் மூலமாக சங்க கால பெண்கள் தன் கைகளில் வளையல்களை தன் அணி பொருளாகக் கொண்டிருந்தனர் என்பது தெளிவு.

அடுத்து குறிஞ்சித் திணையில் ஒரு பாடலில் அட்டி, மணி பதித்த பூண் போன்ற அலங்கார பொருட்கள் இருந்த செய்திகள் இடம்பெறுகின்றன.

**போதார் கூந்தல் இயலணி அழுங்க**
**ஏதி லாளனை நீபிரிந் ததற்கே!**
**அழலவிர் மணிப்பூண் நனையப்(10)**

இவ்வரிகளில் நான் பிரிந்திருந்த நாட்கள்தனில் நீர் என்ன செய்தீர்? என்று தலைவன் கேட்க, தோழி அவருக்குச் சொல்லுவதாய் அமைந்தது இப்பாடல், தலைவனைப் பிரிந்த தலைவி அழுது அழுது அவள் கண்கள் செந்நிறமாய் ஆனது. பின் அந்தக் கண்ணீர் துளிகள் அவள் கழுத்தில் அணிந்திருந்த செந்நிற மணிகள் தாங்கிய அட்டியில் முழுவதுமாக நனைந்தது. என்ற செய்தியிலிருந்து அட்டி என்ற அணிகலன் ஒன்று இவ்விடத்தில் பதிவாகி இருக்கின்றது. சங்ககாலத்தில் பெண்கள் அட்டி அணிந்திருந்தனர் என்ற தகவலில் இருந்து அட்டியும் தமிழர் பண்பாட்டில் ஒன்றே என்பது தெளிவு.

## முடிவுரை

தமிழர்களுடைய பண்பாடு எதுவென்ற கேள்விக்கு சங்க இலக்கியம் கூறுகின்ற பாடல்களில் பதில் காண முடியும். இன்று படிம மளர்ச்சியில் நாம் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு பொருளும் சங்க கால மக்களினுடையது. இன்று வரை அது தொடர்வதால், தமிழர் பண்பாடாய் சிறப்புற்று விளங்குகிறது.

## அடிக்குறிப்புகள்


1. ஐங்குறுநூறு, மருதமும் நெய்தலும், புலியூர் கேசிகன், 2008, ப. 08.
2. தமிழர் பண்பாடு, பக்தவச்சல பாரதி, ப. 02.
3. ஐங்குறுநூறு, குறிஞ்சி பாலை முல்லை, புலியூர் கேசிகன், 2008, பா:283, ப.130.
4. மேலது, பா: 246, ப. 73.
5. மேலது, பா: 203, ப. 12.
6. மேலது, பா: 208, ப. 19.
7. ஐங்குறுநூறு, மருதமும் நெய்தலும், புலியூர் கேசிகன், 2008, பா: 83, ப. 136.
8. மேலது, பா: 196, ப. 296.
9. மேலது, பா: 197, ப. 297.
10. ஐங்குறுநூறு, குறிஞ்சி பாலை முல்லை, புலியூர் கேசிகன், 2008, பா:232, ப.54.